உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 29.05.2026 • மலர் 04 • இதழ்: 149 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 29.05.2026 • Vol : 04 • Issue : 149 • Page : 4 • Rs. 5/-

# கட்சி மேலிடம் மாநிலங்களவை பதவியை தர முன் வந்தது

## சித்தராமையா பரபரப்பு பேட்டி



பெங்களூரு மே. 29

கர்நாடகாவில் 2023ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடித்தது. முதல்மந்திரியாக சித்தராமையாவும், துணை முதல்மந்திரியாக டி.கே. சிவக்குமாரும் பதவியேற்றனர். அப்போது, முதல்மந்திரி அதிகார பகிர்வு தொடர்பாக பரபரப்பான தகவல் வெளியானது. இதன்படி, இரண்டரை வருட காலம் சித்தராமையாவும், மற்றொரு இரண்டரை வருட காலத்தில் டி.கே. சிவக்குமாரும் முதல்மந்திரி பதவியை வகிப்பார்கள் என தகவல் கசிந்தது.

ஆனால் கட்சியின் தலைமையிடம் இருந்து இதுபற்றி அதிகாரப்பூர்வ தகவல் எதுவும் வெளிவராத சூழலில், தலைமைத்துவம் தொடர்பான பூசல் கட்சிக்குள் புகைந்து கொண்டே இருந்தது. கடந்த ஆண்டு நவம்பரில் ஆட்சியில் மாற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. துணை முதல்மந்திரி டி.கே. சிவக்குமாரின் ஆதரவாளர்களும் அதனை ஆவலாக எதிர்பார்த்து இருந்தனர். ஆனால், அதிகார மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

அவ்வப்போது சித்தராமையாவிடமும், டி.கே. சிவக்குமாரிடமும் முதல்மந்திரி பதவி பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பி வந்தனர். அப்போது எல்லாம், இருவரும் அதிகாரப்பூர்வ தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை. எனினும், முதல்மந்திரி சித்தராமையா கூறும்போது, இந்த விவகாரத்தில், கட்சி மேலிட கட்டளைக்கு நானும், சிவக்குமாரும் கட்டுப்படுவோம் என்றார்.

இந்தசூழலில்,துணை முதல்மந்திரி டி.கே. சிவக்குமாருக்கு வழிவிடுவதற்காக முதல்மந்திரி பதவியை சித்தராமையா ராஜினாமா செய்கிறார் என நேற்று தகவல் வெளியானது. இதுபற்றி அக்கட்சியின் மூத்த எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் தலைவரான ஆர்.வி. தேஷ்பாண்டே கூறும்போது, ராஜினாமா செய்வது என முடிவு செய்து விட்டேன் என்று சித்தராமையா என்னிடம் கூறினார்.

நீங்களே ஏன் பதவியில் தொடர கூடாது? என வற்புறுத்த முயற்சித்தேன். ஆனால் அவரோ, கட்சியின் மேலிடத்திற்கு நான் வாக்கு கொடுத்து விட்டேன். அதனை நான் மதிக்க வேண்டும் என்றார். இதனால், நாளை அல்லது நாளை அவர் ராஜினாமா செய்வார் என்று தேஷ்பாண்டே கூறினார்.

இந்த சூழலில், கர்நாடக முதல்அமைச்சர் பதவியை சித்தராமையா நேற்று ராஜினாமா செய்துள்ளார். இதனை தொடர்ந்து, காங்கிரஸ் மேலிட உத்தரவை ஏற்று டி.கே. சிவக்குமார் உடன் பெங்களூருவில் உள்ள மக்கள் மாளிகைக்கு சித்தராமையா சென்றார். எனினும், கவர்னர் இல்லாத சூழலில், அவருடைய செயலரிடம் ராஜினாமா கடிதம் வழங்கினார்.

இதன் பின்னர் வெளியே வந்த அவர், கர்நாடக முதல்அமைச்சர் பதவியை ராஜினாமாசெய்துவிட்டேன் என்று செய்தியாளர்களிடம் உறுதிப்படுத்தினார். எனக்கு மாநிலங்களவை பதவி தரப்படும் என கட்சி மேலிடம் முன்வந்தது.

ஆனால், நான் மறுத்து விட்டேன். எனக்கு தேசிய அரசியலில் விருப்பமில்லை என்றார்.

கர்நாடக மக்களுக்கு நான் தொடர்ந்து சேவை செய்வேன் என்று கூறினார். இதுபற்றி கட்சியின் மூத்த தலைவரான எச்.கே. பாட்டீல் கூறும்போது, சித்தராமையா மாநிலங்களவைக்கு செல்லமாட்டார் என்று கூறினார்.

தொடர்ந்து சித்தராமையா கூறும்போது, மதவாத சக்திகளுக்கு எதிராக நான் போராடுவேன். அரசியல் சாசனத்திற்கு எதிரானவர்களை எதிர்த்து, எனது கடைசி மூச்சு இருக்கும் வரை தொடர்ந்து போராடுவேன் என்றும் கூறினார். நான் முதல்மந்திரி, எதிர்க்கட்சி தலைவர், எம்.எல்.ஏ., துணை முதல்மந்திரி மற்றும் உள்ளூர் அளவில் பிற பதவிகளையும் வகித்து இருக்கிறேன் என்று கூறினார்.

இதனை தொடர்ந்து, டி.கே. சிவக்குமார் நாளை முதல்அமைச்சராக பதவி ஏற்க உள்ளார் என தகவல் தெரிவிக்கின்றது. 2013ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை மாநில முதல்அமைச்சராக சித்தராமையா பதவி வகித்து இருக்கிறார். கர்நாடகாவின் நீண்ட கால முதல் அமைச்சர் என்ற பெருமையை பெற்றவர் ஆவார்.

### மூதாட்டிக்கு பாலியல் வன்கொடுமை:

## ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை: நயினார் நாகேந்திரன்



சென்னை, மே. 29

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை வேளச்சேரியில் 60 வயது மூதாட்டிக்கு பாலியல் வன்கொடுமை நடந்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன. தவெக தலைமையின் கீழ் தமிழகம் அதலபாதாளத்தைநோக்கிப்பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதை நினைத்தாலே அச்சம் மேலோங்குகிறது.

கடந்த ஆட்சியைப் போலவே இந்த ஆட்சியிலும் பெண்கள் வெளியில் தலைக்காட்டவே அஞ்சி நடுங்குவதைப் பார்த்தால் "ஆட்சி மாறினாலும் காட்சிகள்மாறவில்லை" என்ற கசப்பான உண்மை நமக்கு புலப்படுகிறது. சினிமாக்காரர்களை எல்லாம் சந்திப்பதற்கு நேரமிருக்கும் முதல் அமைச்சருக்கு சட்டம் ஒழுங்கில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படை தெரியாதா? இல்லை பாதிக்கப்படுவது பெரும்பாலும் பெண்கள் தானே என்ற அலட்சியமா?

சிறுமிமுதல்மூதாட்டிவரைஎவருக்கும் பாதுகாப்பில்லாத ஆட்சியை நடத்திக் கொண்டு, விதவிதமாக வீடியோக்கள் மட்டும் வெளியிடுவதற்கு முதல் அமைச்சர் ஜோசப் விஜய் கூனிக் குறுக வேண்டும்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பெண் அதிரடிப்படை: இன்று தொடங்கி வைக்கிறார் முதலமைச்சர்

சென்னை, மே. 29

த.வெ.க. தலைவர் விஜய், முதல்அமைச்சராக பொறுப்பேற்றவுடன், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்படும் என்று அறிவித்தார். அவருடைய இந்த அறிவிப்பு உடனடியாக அமலுக்கு வந்துவிட்டது. இந்த அதிரடி படையின் முதல் பெண் ஐ.ஜி.யாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டுள்ளார். இந்த படையில் ஒரு போலீஸ் சூப்பிரண்டு, 2 துணை போலீஸ் சூப்பிரண்டுகள் மற்றும்4இன்ஸ்பெக்டர்கள்உள்பட30க்கும்மேற்பட்ட போலீசார் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர்.

இந்த அதிரடிப்படையில் இடம்பெறும் பெண் போலீஸ் மற்றும் பெண் சப்இன்ஸ்பெக்டர்களுக்கு சிறப்பு சீருடை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. படத்தில் உள்ள பெண் சப்இன்ஸ்பெக்டர் அணிந்துள்ள சீருடைதான் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையில் இடம்பெறும் போலீசார் மற்றும் சப்இன்ஸ்பெக்டர்கள் அணியும் சீருடையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சீருடை வழக்கமான போலீசார் மற்றும் சப் இன்ஸ்பெக்டர்கள் அணியும் சீருடை அல்ல.

நேவி ப்ளூ கலரில் அரைகை மேல் சட்டையும், காக்கி கலர் பேண்டும் சீருடையாக கொடுக்கப்பட உள்ளது. கருப்பு கலர் தொப்பியும், கருப்பு கலர் ஷூவும் அணிந்து பார்ப்பதற்கு மிடுக்காக காணப்படும் வகையில் இந்த சீருடை உள்ளது.

சிங்கப்பெண் அதிரடிப்படையின் தொடக்கவிழா நேற்று ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் நடக்க இருந்தது. முதல்அமைச்சர் விஜய் தொடக்க விழாவில் கலந்து கொள்ள இருந்தார். முதல்அமைச்சர் நேற்று டெல்லி சென்றுவிட்டதால், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் தொடக்க விழா தள்ளிவைக்கப்பட்டது.

இந்தநிலையில், நாளை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சி சிங்கப்பெண் சிறப்பு படையை தொடங்கி வைக்கிறார் முதல் அமைச்சர் விஜய்.

## அரசு மருத்துவமனையில் விரைவில் மாற்றங்கள் வரும்: அமைச்சர் சம்பத்குமார் பேட்டி



கோவை, மே. 29

முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசு பொறுப்பேற்று இரு வாரங்களை கடந்துள்ளது. இந்த இரு வார காலகட்டத்தில் சில அமைச்சர்களின் அதிரடி நடவடிக்கள் தமிழக மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்தநிலையில்,கோவையில் அமைச்சர் சம்பத்குமார் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

கோவைக்கு முதல்அமைச்சர் விஜய் விரைவில் வருவார். கோவைக்கு மெட்ரோ ரெயில் கொண்டு வருவது தவெகவின் தேர்தல் வாக்குறுதியில் உள்ளது.

டாக்டர்கள், செவிலியர்கள் பற்றாக்குறை உள்ளது. அரசு மருத்துவமனையில் விரைவில் மாற்றங்கள் வரும். அனைத்து பிரச்சனைகளும் சரி செய்யப்படும் என்றார்.

### நீர் மோர் பந்தல் அமைத்திடுக:

## தவெக தொண்டர்களுக்கு என்.ஆனந்த் அறிவுறுத்தல்



சென்னை, மே. 28

தமிழகத்தில் வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி உள்ளனர். வெயிலை சமாளிக்க தமிழகம் முழுவதும் அரசியல் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், நற்பணி மன்றங்கள் சார்பில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழகம் முழுவதும் நீர் மோர்ப் பந்தல் அமைத்திட வேண்டும் என்று தவெக தொண்டர்களுக்கு அமைச்சரும், தவெக பொதுச் செயலாளருமான என்.ஆனந்த் அறிவுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

சுட்டெரிக்கும் கோடை வெயிலால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, தங்களது அன்றாடத் தேவைகளுக்காக வெளியே வருவோருக்கு, நீர்ச்சத்துக் குறைபாடு ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

இது குறித்த விழிப்புணர்வு, மக்களுக்கு அவசியம் தேவை.

இந்த வெக்கையைச் சமாளிக்க, கழகத்தலைவரும், முதல்அமைச்சருமான விஜய்யின் அறிவுறுத்தலின்படி, தவெக நிர்வாகிகள் தங்கள் பகுதிகளில் பொதுமக்களின் தாகத்தைப் போக்கும் வகையில் நீர்மோர்ப் பந்தல்களைத் திறக்க வேண்டும். பழச்சாறு, இளநீர், மோர், குடிநீர், வெள்ளரிக்காய், நுங்கு உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## திருவள்ளூர்: அம்மா உணவகத்தில் ஜெயலலிதாவின் புகைப்படம் நீக்கம்! சசிகலா வேதனை



சென்னை, மே. 29

அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் வி.கே.சசிகலா தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

திருவள்ளூர்மாவட்டம்ஆவடிஅடுத்த திருமுல்லைவாயிலில் சோழம்பேடு சாலையில் உள்ள அம்மா உணவகத்தின் முகப்பில் அம்மா உணவகம் என்ற பெயரின் அருகே இருந்த புரட்சித்தலைவி அம்மாவின் புகைப்படம் நீக்கப்பட்டு இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது.

"அம்மா உணவகம்" என்பது ஏழை, எளிய சாமானிய மக்களின் பசியை போக்கிய ஒரு உன்னதமான மக்கள் நலத்திட்டம் ஆகும். இந்தியாவிலேயே முதல் முறையாக மலிவு விலையில் உணவு வழங்கும் "அம்மா உணவகம்"திட்டத்தை புரட்சித்தலைவி அம்மா கடந்த 2012ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தார்.

இதை நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநில அரசுகள் பார்வையிட்டு வியந்து பாராட்டியுள்ளன. அவர்களது மாநிலங்களிலும் செயல்படுத்தியுள்ளனர். வெளிநாட்டு அமைச்சர்களும் வந்து பார்வையிட்டுள்ளனர்.

மழை, வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களிலும், கொரோனா போன்ற ஊரடங்கு நேரங்களிலும் தவறாமல் உணவளித்த ஓர் மகத்தான திட்டம்தான் அம்மா உணவகம்.

இத்தகைய சிறப்புமிக்க திட்டத்தை வகுத்து கொடுத்த புரட்சித்தலைவி அம்மாவின் புகைப்படத்தை அம்மா உணவகங்களிலிருந்து அகற்றுவது வருத்தமளிக்கிறது.

அம்மா உணவகங்களை கடந்த திமுக தலைமையிலான அரசு மூடிக்கொண்டிருந்த நிலையில், தற்போது அமைந்துள்ள புதிய அரசு அதனை தொடர்ந்து செயல்படுத்த முன்வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. அதே சமயம், மக்களுக்காக வாழ்ந்து, மக்களின் மனதில் என்றும் நிலைத்திருக்கும் புரட்சித்தலைவி அம்மாவின் புகைப்படத்தை மீண்டும் அம்மா உணவகங்களில் இடம்பெற செய்வதுதான் ஏற்புடையதாக இருக்கும் என தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பழைய குற்றால அருவியில்

# சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு கட்டணம் வசூலிப்பதை கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆட்சியர் அலுவலகம் முன்பு குளிக்கும் நூதன போராட்டம்



தென்காசி,மே.29

தென் தமிழகத்தின் சிறந்த சுற்றுலா தளமாக விளங்கும் தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் பழைய குற்றால அருவி, பேரருவி, ஐந்தருவி, சிற்றறிவி, புலி அருவி உள்ளிட்ட பல்வேறு அருவிகள் அமைந்துள்ள நிலையில் ஆண்டு தோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இங்குள்ள அருவிகளில் குளிப்பதற்கு லட்சக்கணக்கானசுற்றுலாபயணிகள் வருகை தருகின்றனர். இந்நிலையில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பழைய குற்றால அருவியில் குளிப்பதற்கு ரூபாய் 20 என்று கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு ள்ளது.

இதற்கு பல்வேறு அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் விவசாய சங்கத்தினர் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு அருவியில் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தை திரும்ப பெற கோரி குளிக்கும் போராட்டத்தை நடத்தினர். அப்போது பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டணத்தை திரும்ப பெற கோரியும் செண்பகாதேவி அருவி அருகே அமைந்துள்ள செண்பகாதேவி அம்மனை தரிசிப்பதற்கு தடை விதிக்கும் வனத்துறையை கண்டித்தும் கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இந்த நூதன போராட்டத்தினால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது

இந்தப் போராட்டத்திற்கு மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் உச்சிமாகாளி தலைமை வகித்தார். வட்டார குழு செயலாளர் பட்டாபிராமன் முன்னிலை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் அயூப்கான், வேலுமயில், தங்கம், குணசீலன், மாவட்ட குழு உறுப்பினர்கள் மாரியப்பன், லெனின் குமார், தர்மகனி, ஆயிஷா, விவசாயிகள் சங்கம் டேனி அருள்சிங், சுப்பிரமணியன், பிரபாகரன், சூர்யா, இசக்கிமுத்து, வட்டார குழு உறுப்பினர்கள் குருசாமி, ஐயப்பன், ராம மூர்த்தி, ராஜகோபால் கற்பகவள்ளி, அய்யாதுரை, சேக்முகமது, தானுமூர்த்தி, கிளைச் செயலாளர்கள் கருப்பசாமி, ராமசாமி, சண்முக வாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தொண்டியில்

# தமுமுக சமூக நீதி மாணவர் இயக்கம் சார்பில் சாதனை மாணவிகளுக்கு விருது வழங்கும் விழா

### ஆஸ்திரேலியா விஞ்ஞானி ஐநா சபை வளர்ச்சி திட்ட தூதுவர் பேராசிரியர் சுல்தான் கலீபா பங்கேற்பு




ராமநாதபுரம், மே 29

ராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் தொண்டி பேரூர் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சமூக நீதி மாணவர் இயக்கம் சார்பாக 31 ஆம் ஆண்டு கல்வி விழிப்புணர்வு மற்றும் மாணவ மாணவிகளுக்கு பரிசு அளிக்கும் விழா தொண்டி இஸ்லாமிக் மாடல் மெட்ரிக் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவில் ராமநாதபுரம் கிழக்கு மாவட்ட தலைவரும் தொண்டி ஐக்கிய ஜமாத் துணைத் தலைவருமான வழக்கறிஞர் ஜிஃப்ரி தலைமை தாங்கினார்.

தொண்டி 15 வது வார்டு கவுன்சிலர் பெரியசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

நாச்சியா இறைவசனம் ஓதி நிகழ்வை துவங்கி வைத்தார். தொண்டி செய்யது முகமது அரசு மேல்நிலைப்பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இஸ்லாமிக் மாதிரி மெட்ரிகுலேஷன் பள்ளி, அல் ஹிலால் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, அமீர் சுல்தான் அகடாமி, வில்கம் உயர்நிலைப்பள்ளி, மற்றும் நம்புதாளை அரசு உயர்நிலைப்பள்ளி, ஆகிய பள்ளிகளில் 10ம் வகுப்பு 12ஆம் வகுப்புகளில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை பாராட்டி பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இதில் தமுமுக மாநில செயலாளர் சாதிக் பாட்ஷா, தமுமுக தலைமை பிரதிநிதி மண்டலம் ஜெய்னுல் ஆபிதீன், தொண்டி ஐக்கிய ஜமாத் செயலாளர் பாரூக் ஹாஜியார், ஐக்கிய ஜமாத் கௌரவ தலைவர் பொறியாளர் எம் எம் அபூபக்கர், ஐக்கிய ஜமாத் பொருளாளர் ஜலால், அல் ஹிலால் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் அப்துல் ரவுப் நிஸ்தார், இந்து தர்ம பரிபாலன சபையின் கௌரவ தலைவர் பாலசுப்பிரமணியம், இந்து மத தர்ம பரிபாலன சபை தலைவர் எல் ஆர் சி ராஜசேகர், பவுசியா புரோஸ் கான், பொறியாளர் சஃபியுல்லாஹ், அபு ஹாரிஸ் கரீம், நவ்பல், அஸ்கர், சகோதரி சரிபா 14வது வார்டு கவுன்சிலர் சமீமா பானு நாச்சியார் மற்றும் தொண்டியைச் சேர்ந்த அனைத்து ஜமாத்தார்கள் அனைத்து சமுதாயத் தலைவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளராக ஆஸ்திரேலிய விஞ்ஞானி ஐநாவின் நிலையான வளர்ச்சித்திட்டத்தின் தூதுவர் பேராசிரியர் சுல்தான் கலீபா ஹாருண் அல் ரஷீத் கலந்துகொண்டு மாணவர்கள் இடையே சிறப்புரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் தொண்டி மற்றும் நம்புதாளையில் உள்ள பள்ளி மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவப் படுத்தப்பட்டது. அனைத்து பள்ளி ஆசிரியர்களுக்கும் விருது வழங்கி கல்விச் சேவை சிறந்த முறையில் செய்ய பாராட்டி பரிசளிக்கப்பட்டது. தொண்டி செய்யது முகமது அரசு மேல்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு தேர்வில் 100 சதவீத தேர்ச்சி விகிதத்தை காட்டியதற்கும் சிறப்பு பரிசும் வழங்கப்பட்டது.

குறிப்பாக தொண்டியில் அல்ஹிலால் மெட்ரிகுலேஷன் பள்ளியுடைய 10ம் வகுப்பில் இனாயா 495 மதிப்பெண்கள் பெற்று தமிழ்நாட்டில் நான்காவது இடமும் மாவட்டத்தில் இரண்டாவது இடமும் பெற்ற மாணவியை கௌரவப்படுத்தப்பட்டது.சமூகநீதிமாணவர்இயக்கத்தின் தொண்டிபேரூர் செயலாளர் ரியாஸ் நன்றி கூறினார். மைதீன், பரக்கத் அலி, ஹம்மாது, ஜலால், சாபிர் அலி, இப்ராஹிம், பெரியசாமி, நவ்ஃபிக், சிஹான் மற்றும் தொண்டி தமுமுக பேரூர் நிர்வாகிகள் சமூக நீதி மாணவர் அமைப்பு நிர்வாகிகள் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில்

# பக்ரீத் பண்டிகை யொட்டி 1500 பேருக்கு பிரியாணி அரிசி




ஈரோடு மே 29

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆண்டுதோறும் ரம்ஜான்பண்டிகையை ஒட்டி பிரியாணி அரிசி மற்றும் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ரம்ஜான் பண்டிகை நேரத்தில்சட்டசபை தேர்தல் நடந்ததால் தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி பிரியாணி அரிசி வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு 22 வது ஆண்டாக மத நல்லிணக்க நிகழ்ச்சியாக பிரியாணி அரிசி மற்றும் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

ஈரோடு ஆர் கே வி ரோட்டில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு மண்டல செயலாளர் சாதிக் அலி தலைமை தாங்கி 1500 க்கும் மேற்பட்டவர்களுக்கு பக்ரீத் பண்டிகையை ஒட்டி பிரியாணி அரிசி மற்றும் பொருட்களை வழங்கினார். இதில் மாவட்ட பொருளாளர் ஆல்ட்ரின் ராஜேஷ் மாவட்ட துணை செயலாளர் தம்பி முருகானந்தம் பெருந்துறை தொகுதி மாவட்ட செயலாளர் விஜய பாலன் குமார் பாளையம் தொகுதி மாவட்ட செயலாளர் கதிர் வேந்தன் தேர்தல் பணிக்குழு பழனிச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வேலை கிடைக்காத விரக்தியில் வாலிபர் தூக்கு போட்டு தற்கொலை

சுசீந்திரம்.மே29

சுசீந்திரம் எஸ் எம் பெருமாள் நகர் பகுதியில் வசித்து வரும் மகாலிங்கம் (45) இவரது சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம் கோடாங்கி பட்டி இவரது மகன் மணிகண்டன் (26 )இவர் பிஎஸ்சி கேட்டரிங் படித்து முடித்து கேட்டரிங் வேலை கிடைக்காத விரக்தியில் இருந்து வந்துள்ளார். இந்நிலையில் சம்பவத்தன்று தனது வீட்டு பாத்ரூமில் வெள்ளை நிற டவ்வலால் தூக்கு போட்டு தொங்கிய நிலையில் இருந்துள்ளார். அவரை மீட்டு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். இதுகுறித்து அவரது தந்தை மகாலிங்கம் சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சுசீந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டத்திற்கு புறம்பாக மது பாட்டில்கள் விற்றவர்கள் கைது; மது பாட்டில்கள் பறிமுதல்

சுசீந்திரம் மே29

சுசீந்திரம் காவல் உதவி ஆய்வாளர் தனிஷ் லியோன் தலைமையில்போலீசார்தெங்கம்புதூர்பகுதியில்சோதனை மேற்கொள்ளும் போது தெங்கம்புதூர் காமராஜர் சிலையின் பின்பு சந்தேகப்படும்படி நின்ற நபரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் அவர் புத்தளம் பகுதியைச் சார்ந்த ரெஜி குமார்(32) என்பதும் அவர் அரசு சட்டத்திற்கு புறம்பாக அதிக லாப நோக்கத்தோடு விற்பனைக்காக வைத்திருந்த 180 மில்லி அளவு கொண்ட 26 மது பாட்டில்கள் அவரிடம் இருந்து பறிமுதல் செய்து கைது செய்து சுசீந்திரம் காவல் நிலையம் கொண்டு வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அதுபோல தெங்கம்புதூர் சாஸ்தான் கோவில் பகுதியில் ரோந்து பணி மேற்கொள்ளும் போது சந்தேகம் படும்படி நின்ற நபரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் தெங்கம்புதூர் சாஸ்தான்கோவில் பகுதியில் வசிக்கும் கண்ணன் (45 ) என்பதும் அதிக லாப நோக்கத்தோடு விற்பனைக்காக வைத்திருந்த 180 மில்லி அளவு கொண்ட 26 மது பாட்டில்களையும் கண்ணனையும் கைது செய்து சுசிந்திரம் காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தெங்கம்புதூர் அருகே உள்ள புத்தளம் பகுதியில் ரோந்து பணி மேற்கொள்ளும் போது சந்தேகப்படும்படி நின்ற நபரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் புத்தளம் உசரவிளை பகுதியைச் சார்ந்த சுதர்சன் (31) என்பதும் இவர் அதிக லாப நோக்கத்தோடு தனது இருசக்கர வாகனத்தில் வெள்ளை சாக்கில் விற்பனைக்காக வைத்திருந்தவரை பிடிக்க முற்படும்போது 180 மில்லி எடை கொண்ட 50 மது பாட்டில்களை சாக்கு பையோடு வைத்துவிட்டு அங்கிருந்து தப்பித்து சென்று விட்டார். 50 மது பாட்டில்களையும் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மணப்பாறை அருகே

# உயிரிழந்த நிலையில் முதியவர் சடலமாக மீட்பு



மணப்பாறை, மே. 29

மணப்பாறை அருகே கோட்டை பூலாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 74 வயது முதியவர் அண்ணாவி, கடந்த 26 ஆம் தேதி விவசாய நிலத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பவில்லை. பல இடங்களில் தேடியும் கிடைக்காததால், அவரது மகன் வையம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இந்நிலையில், இன்று காலை அவரது விவசாய நிலத்திற்கு அருகே உள்ள சோளக்காட்டில் அண்ணாவி உயிரிழந்த நிலையில் சடலமாகக் கிடந்தார். அவரது உடலைக் கைப்பற்றிய வையம்பட்டி போலீசார், வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆரல்வாய்மொழி அருகே

# சட்டக் கல்லூரி மாணவரை தாக்கி கொலை மிரட்டல்; சக மாணவர்கள் 2 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், மே. 29

நெல்லை மாவட்டம் ராதாபுரம் தாலுகா, மகேந்திரகிரி கிருஷ்ணாபுரத்தை சேர்ந்தவர் ஜெகன். இவர் ஆரல்வாய்மொழி குமாரபுரம் சாலையில் உள்ள தனியார் சட்டக்கல்லூரியில் 3ம் ஆண்டு சட்டம் படித்து வருகிறார். இவருக்கும் அதே கல்லூரியில் படிக்கும் முதலாம் ஆண்டு மாணவர்களான விவேக் மற்றும் வெங்கடேஷ் ஆகியோருக்கும் இடையே ஏற்கனவே சில பிரச்சனைகள் காரணமாக முன்விரோதம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த 22ஆம் தேதி ஜெகன் தேர்வு எழுதுவதற்காக கல்லூரிக்கு சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த விவேக் மற்றும் வெங்கடேசன் ஆகிய இருவரும் ஜெகனை வழிமறித்து தகாத வார்த்தைகளால் பேசி அவரை தாக்கியதுடன் கொலை மிரட்டலும் விடுத்துள்ளனர். இது குறித்து ஜெகன் ஆரல்வாய்மொழி போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தோவாளை அருகே

# வீட்டு முன்பு நிறுத்தி இருந்த பைக் திருட்டு

நாகர்கோவில், மே. 29

தோவாளை அருகே வீரவநல்லூர் பகுதியை சேர்ந்தவர் சௌந்தர்ராஜன் (42). கூலி தொழிலாளியான இவர் நேற்று முன்தினம் இரவு தனது இருசக்கர வாகனத்தை தனது வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்தார். நேற்று அதிகாலை சுமார் 5 மணியளவில் பார்த்தபோது வீட்டின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த வாகனம் மாயமாகி இருந்தது. நள்ளிரவு முதல் அதிகாலை வரையிலான இடைப்பட்ட நேரத்தில் மர்ம நபர்கள் யாரோ வாகனத்தை திருடி சென்றது தெரிய வந்தது. இது குறித்து சௌந்தர்ராஜன் பூதப்பாண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து விசாரித்து வருகின்றனர்.

## ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் கிராமத்தில்

# ஸ்ரீ திருமலை திருப்பதி கெங்கையம்மன் ஆலயத்திலிருந்து ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் 100வது பிறந்தநாள் முன்னிட்டு பிரேம சாய் ரத யாத்திரை



திருப்பத்தூர் மே 29

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் ஸ்ரீ திருமலை திருப்பதி கெங்கையம்மன் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் 100வது பிறந்தநாள் கொண்டாட்டங்களை முன்னிட்டு பிரேம சாய் ரத யாத்திரை சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சாய்பாபா பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மேளதாளம் முழங்க சாய் ரதத்தை வரவேற்று பக்தி பரவசத்துடன் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஆலயத்தில் சிறப்பு பூஜைகள், தீபாராதனை மற்றும் பக்தி பாடல்கள் நடைபெற்றன.

ரத யாத்திரை தேவலாபுரம் கோவிந்தாபுரம் எட்டியம்மன் அம்மன் கோவில் முக்கிய வீதிகள் வழியாக சென்றது. இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாய்பாபாவின் அருளாசியை பெற்றனர். அதனை தொடர்ந்து அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் குழுவினர்கள் ஏற்பாடு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தருமபுரியில்

# உலக பட்டினி தினத்தையொட்டி வெங்கடேஸ்வரா மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளியில் தவெகவினர் காலை உணவு வழங்கினர்



தருமபுரி மே 29

தருமபுரியில் உலக பட்டினி தினத்தையொட்டி தமிழ்நாடு முழுவதும் தவெக தொண்டர்கள் சார்பில் ஏழை, எளிய, ஆதரவற்றோர்,முதியோர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என தவெக தலைவர் முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் தவெக தொண்டர்களுக்கு அறிவுறுத்தினார். இதனை தொடர்ந்து தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் தாபா. சிவன் தலைமையில் தருமபுரி தெற்கு ஒன்றிய தவெக சார்பில் ஒன்றிய செயலாளர் செந்தில்நாதன் ஏற்பாட்டில் தருமபுரி பிடமனேரியில் உள்ள வெங்கடேஸ்வரா மனவளர்ச்சி குன்றியவர்களுக்கன பள்ளியில் உள்ள மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட செயற்குழு உறுப்பினர் வித்யா ,ஒன்றிய நிர்வாகிகள் நாகராஜ், இலக்கியம்பட்டி வெங்கடேஷ்,அருள் பூவரசன், பரமசிவம், குனா, சுந்தரவேல், பிரகாசம் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை ஆவடி, பிரதான சாலை திரு சங்கரர் நகரில், அமைந்துள்ள அருள்மிகு சங்கர விநாயகர் சுவாமி திருக்கோயிலில் மூலவர் முழுமுதற் கடவுளான அருள்மிகு சங்கர விநாயகருக்கு புனராவர்த்தன ஜீரணோத்தாரண நூதன பாலமுருகர் மற்றும் ஐயப்ப சுவாமி பிரதேச ஸ்ரீ செய்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் நடைபெற உள்ளது. அனைத்து பக்தர்களும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகிகள் மற்றும் விழா குழுவினர் அன்புடன் அழைக்கின்றனர். இவ்விழாவில் அருள்மிகு கமலகண்ணி அம்மன் திருக்கோயில் மௌனகுரு தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள் கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்து அருள் ஆசி வழங்க உள்ளார்.

## தென்காசியில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு

# தமிழக வெற்றி கழகம் சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம்



தென்காசி,மே.29

தென்காசியில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் தென்காசி மத்திய மாவட்ட தமிழக வெற்றி கழக செயலாளர் ராஜ பிரகாஷ் தலைமையில், தென்காசி நகர செயலாளர் சங்கர பாண்டியன் முன்னிலையில் தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயத்தின் முன்பு பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி செயலாளர் சிவா ,மாவட்ட பொருளாளர் மாரியப்பன், கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் ஜூடு, தென்காசி நகர நிர்வாகிகள் நகர இளைஞரணி அமைப்பாளர் அன்பு பாலா, சுப்பிரமணியன்,

நாகராஜன், வினோத் ,சந்துரு, சுதன், கார்த்திக், மாரி, முத்துக்குமார், குணா ,வெங்கடேஷ், ராஜேஷ்வரன், உதயகுமார், கோபி ,சிவசித்தாராமன், சுந்தர் ,கோகுல், பாலசுப்பிரமணியன் ,மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் ராக்லேட், மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் சுரேஷ் மணி ,நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சங்கர சுப்பிரமணியன் செய்தார் மற்றும் தமிழக வெற்றி கழகத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்



தருமபுரி மாவட்டம் கடத்தூர் ஒன்றியம் புளியம்பட்டியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வருடாந்திர செயல்திட்டம் 2025 2026 ன் கீழ் ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் காளான் விதை தொகுப்பு மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதை மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# சூலூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை அமைச்சர் சம்பத் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



கோவை மே:29

2026 சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக மற்றும் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சிகளுடன் ஆட்சியமைத்து தவெக தற்போது அமைச்சரவை முழுமையாக விரிவு படுத்தபட்டுள்ளது. இன்னிலையில் தமிழகம் முழுவதும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்கள் புதுப்பிக்கபட்டு திறக்கபட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கோவை சூலூர் சட்டமன்ற உறுப்பினர் புதுப்பிக்கபட்ட அலுவலக திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார். மேலும் கோவை சூலூர் தவெக சட்டமன்ற உறுப்பினர் என் எம் சுகுமார் சட்டமன்ற உறுப்பினர் நாற்காலியில் அமர வைத்து வாழ்த்து தெரிவித்தார் அமைச்சர் சம்பத். உடன் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கிரி பிரசாத், கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி கனிமொழி சந்தோஷ், கோவை கிழக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் சண்முகப்பிரியா, சூலூர் வட்டார தலைவர் நவீன் குமார், கோவை கிழக்கு மாவட்ட நிர்வாகி ஆர் சாந்தாமணி ராமச்சந்திரன் மற்றும் தவெக தொண்டர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## தஞ்சாவூர் தமிழ்பல்கலைக் கழகத்தில்

# 2026 ஆம் ஆண்டிற்கு முனைவர் பட்ட மாணவர்கள் சேர்க்கை

தஞ்சாவூர் மே 29

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் 2026 ஆம் ஆண்டிற்கு முனைவர் பட்ட மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றது

முனிவர் பட்ட மாணவிக்கு துணைவேந்தர் குழு உறுப்பினர் மருத்துவர் பேராசிரியர் பாரத ஜோதி தலைமையில் பதிவாளர் பொ) பன்னீர்செல்வம் முன்னிலையில் முனைவர் பட்ட சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது உடன் கல்வி நிலைய ஆய்வு இயக்கக இயக்குனர் முனைவர் கற்பகம், உதவியாளர்கள் ராஜகு மாரி, வனஜா, சிவகாமி, காந்திமதி, சத்யா, கௌரி, ஆகியோர் உடன் இருந்தனர்



சென்னை ஆவடி, பழைய அக்ரஹாரம் குளக்கரை தெருவில் அமைந்துள்ள, அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கோயில் நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது ஆகும். வருகைதந்த அனைத்து பக்தர்களுக்கும், ஆலயம் சார்பில் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் சீனிவாசன், செயலாளர் நாகேந்திரன், பொருளாளர் மனோகரன் மற்றும் ஆலய நிர்வாகிகள், விழா குழுவினர் சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர்.



## பாப்பாரப்பட்டி பேரூராட்சி த வெ க சார்பில்

# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்

தருமபுரி மே 29

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி பேரூராட்சி த வெ க சார்பில் உலக பட்டினி தினத்தையொட்டி தமிழ்நாடு முழுவதும் தவெக தொண்டர்கள் சார்பில் ஏழை, எளிய, ஆதரவற்றோர், முதியோர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என தவெக தலைவர் முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் தவெக தொண்டர்களுக்கு அறிவுறுத்தினார். இதனை தொடர்ந்து தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் தாபா. சிவன் தலைமையில் பாப்பாரப்பட்டி பேரூராட்சி செயலாளர் ஆர். ரமேஷ் ஏற்பாட்டில் பாப்பாரப்பட்டி பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பாப்பாரப்பட்டி பேரூராட்சி ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



## தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில்

# பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி கலெக்டர் அலுவலகம் முன்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் மே 29

தமிழக விவசாயிகள் சங்கம் பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தமிழக விவசாய சங்கம் சார்பில் தமிழக அரசை கண்டித்து தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விவசாய சங்க ங்களின் கூட்டு இயக்க மாநில துணைத்தலைவர் சுகுமாரன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் ஜெயபால், மாவட்ட செயலாளர் யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

ஆர்ப்பாட்டத்தில் தேர்தல் வாக் குறுதி படி கூட்டுறவு வங்கி கடன்களில் பெற்ற அனைத்து பயிர்கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்என்று ம், நகை கடனையும், முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்றும், வலியுறுத்தப்பட்டது. மேலும் உர விலையைகளை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேகதாதுவில் அணைகட்டுவதை தடுத்து நிறுத்த, மாநில அரசு மத்திய அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் என்பன, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராள மான விவசாயிகள் கலந்து கொண் டு தமிழக அரசுக்கு எதிராக கோஷ ங்கள் எழுப்பினர்

பின்னர் மாநில துணைத்தலை வர் சுகுமாரன் செய்தியாளர்களிடம் கூறுகையில்

புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசு தேர்தல் வாக்குறுதி யில் 5ஏக்கர் வரை நிலம் வைத்துள் ள விவசாயிகளின் பயிர்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதாகவும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்போருக்கு 50 சதவீத கடன் தள்ளுபடி வழங்கப்படு ம் என்று அறிவித்தது. ஆனால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நகைக்கடன் தள்ளுபடி விவசாயிக ளுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யாவிட்டால் தொடர்போராட்டத்தில் ஈடுபடுவோம்

மேலும் உரவிலை கடுமையாக உயர்ந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேகதாதுவில் அணைக்கட்டும் முயற்சியை தடுக்க மத்திய அரசுக்கு மாநில அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். என்றார்.

## திருப்பத்தூரில்

# பணிநிறைவு பெற்ற மின்வாரிய மேற்பார்வையாளருக்கு ரோட்டரி சங்கம் சார்பில் பாராட்டு விழா




திருப்பத்தூர்: மே29

திருப்பத்தூர் மாவட்டம் வெங்களாபுரம் துணைமின்நிலைய வணிக மேற்பார்வையாளர் விஜயகுமார் பணிநிறைவு பெற்றதையடுத்து அவருக்கு பாராட்டுவிழா திருப்பத்தூர் ரோட்டரி சங்க தலைவர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. சங்க செயலாளர் இரவிவர்மன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பணிநிறைவு பெற்ற விஜயகுமார் மற்றும் அவர் மனைவி விமலா ஆகியோருக்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மின்வாரிய செயற் பொறியாளர் அருள் பாண்டியன் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசினை வழங்கினார். விழாவில் ரோட்டரி சங்க பயிற்றுநர் ஏலகிரி செல்வம், சுப்ரமணியன், டாக்டர் லீலா சுப்ரமணியன், எழிலரசன், ரோட்டரி உதவி ஆளுநர் ஆனந்தன், ஆசிரியர் சங்கர், வருமாண்டுத் தலைவர் வெங்கடாசலம், ரங்கநாதன், ஆஞ்சி, மின்வாரிய தொழிற்சங்க நிர்வாகிகள் ஞானபிரகாசம், ஜோதி, ஞானசேகரன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். விழா முடிவில் ரோட்டரி சங்க பொருளாளர் அருண்குமார் நன்றி கூறினார். விழாவில் கலந்து கொண்ட ஐநூறுக்கும் மேற்பட்டோருக்கு அசைவ விருந்து வழங்கப்பட்டது.

## முசிறி

# தனியார் பார் ஊழியர்கள் கைது; சப்கலெக்டர் அதிரடி



திருச்சி, மே. 29

தமிழகம் முழுவதும் டாஸ்மாக் ஊழியர்கள் நடத்திய போராட்டத்தினால் நேற்று கடையடைப்பு ஏற்பட்டது. இதனால் குடிமகன்கள் தனியார் பார்களை நோக்கி படையெடுத்தனர். முசிறி பகுதியில் திருச்சி சாலையில் உள்ள தனியார் பாரில்சில்லறை விற்பனை நடப்பதாக தகவல் அறிந்த முசிறி சார் ஆட்சியர் சுஷ்ரீ சுவாங்கி குந்தியா ஆய்வு மேற்கொண்டார். அப்போது விதிமீறல் கண்டறியப்பட்டதால், பாரில் சில்லறை விற்பனையில் ஈடுபட்டிருந்த வினோத் மற்றும் சரவணன் ஆகியோரை முசிறி போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## தஞ்சாவூரில்

# பால் உற்பத்தியாளர்களுடன் கலெக்டர் ஆலோசனை

தஞ்சாவூர் மே 29

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்க செயலாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமை தாங்கினார்கூ ட்டத்தில் பால் பெருக்குத் துறை, ஆவின் அலுவலர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் செயலாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஆவின் பொருள்களின் விற்பனை அதிகரித்தல், பால் உற்பத்தி அதிகரித்தல் மற்றும் அலுவலகத் திட்ட பணிகள் பற்றி விவாதிக்கப் பட்டது. கிராமப்புறங்களில் பால் உற்பத்தியாளர்கள் சந்திக்கும் இடர்பாடுகள் பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது மேலும் உற்பத்தியாளர்களின் பால் முழுவதையும் தங்கு தடை இன்றி ஆண்டு முழுவதும் கொள் முதல் செய்யப்பட்டு வருவது, குறித் தும் உற்பத்தியாளர்கள் வழங்கும் பாலுக்கு வழங்கப்பட்டு வரும் பால் பணம் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சங்க ஈட்டிய நிகர லாபத்தில் போனஸ் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வரு வது குறித்தும், ஆண்டு முழுவதும் தொடர்ந்து பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு காப்பீடு செய்யப் பட்டு அதன் மூலம் வழங்கப்பட்டு வரும் உதவித்திட்டங்கள் குறித்தும் அதன் மூலம் பயன் பெற்று வரும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

# பாரதீய ஜனதா ஆட்சி அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பதற்காக தவெக வுக்கு ஆதரவு

## காங்கிரஸ் அகில இந்திய செயலாளர் செல்லக்குமார் பேட்டி



ஈரோடு மே 29

அகில இந்திய காங்கிரஸ் கட்சி செயலாளரும் முன்னாள் எம்பியுமான செல்லக்குமார் ஈரோட்டில் நிருபர்களிடம் கூறியதாவது தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி மறைமுகமாகவோ பின் வாசல் வழியாகவோ ஆட்சி அதிகாரத்திற்கு வந்து விடக்கூடாது என்பதற்காக தமிழக வெற்றிக் கழகத்திற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு அளித்துள்ளது. தமிழக காங்கிரஸ் எப்போதும் தமிழக மக்களின் உணர்வுகளு க்கு மதிப்பளிக்கும். காவிரியில் மேகதாதுவில் அணை கட்டுவதற்கு தமிழக காங்கிரஸ் கட்சி எப்போதும் அனுமதிக்காது. எதிர்கட்சி தலைவர் மு க ஸ்டாலின் காங்கிரஸ் கட்சி எப்போதும் முதுகில் குத்துவது என்பது போன்ற தோற்றத்தை கட்டமைக்க முயற்சி செய்கிறார் பாரதிய ஜனதா அரசுக்கு அதிமுக அளித்த ஆதரவை வாபஸ் பெற்றதும் திமுக பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு தெரிவித்தது. இது துரோகமாக திமுகவுக்கு துரோகமாக தெரியவில்லையா அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்வது ஜனநாயகத்திற்கு ஆரோக்கியமானது அல்ல. முதலமைச்சர் விஜய் கால அவகாசம் எடுத்து கொண்டு தேர்தல் வாக்குறுதிப்படி பயிர் கடன்களை ரத்து செய்ய வேண்டும். கோவையில் 10 வயது சிறுமியின் கொலைக்கு காரணமானவர்களுக்கு கடுமையாக தண்டனை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பட்டியின் போது மாவட்ட தலைவர்கள் ராஜேஷ் ராஜப்பா முத்துக்குமார் மண்டல தலைவர்கள் விஜயபாஸ்கர் புனிதன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## குதிரை பேரம் இல்லாமல் நேர்மையான ஆட்சி செய்ய வேண்டும்

# எங்கள் நிலை சரியான முறையில் ஆட்சி செய்தால் வரவேற்போம்



திருப்பூர்:மே29

தமிழ்நாட்டைப் பார்த்து ஆட்சி செய்தவர்கள் தமிழ்நாட்டில் நடக்கும் குதிரை பேரத்தை பார்த்து சிரிக்கிறார்கள் இதற்கு முறையான சிபிஐ விசாரணை தேவை. என திருப்பூரில் இந்து முன்னேற்ற கழக தலைவர் கோபிநாத் பேட்டி.

இந்து முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வழக்கறிஞர் கோபிநாத் திருப்பூரில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசுகையில்.

ராஜாஜி, எம்.ஜி.ஆர் போன்ற மாமேதைகள் ஆட்சி செய்தார்கள். தமிழகத்தை பார்த்து இந்தியா முழுவதும் ஆட்சி செய்யம் நிலை நீடித்த நிலையில் இப்போது இந்தியா முழுவதும் தமிழ்நாட்டை பார்த்து சிரிக்கும் நிலை உள்ளது. அதிமுகவில் இருந்து விலகி தவெகவில் இணைகிறார்கள் முழுக்க முழுக்க குதிரை பேரம் நடைபெறுகிறது. சாமானியர்கள் கட்டிய வரிப்பணம் மூலமே தேர்தல் நடைபெறுகிறது. வெற்றி பெற்று உடனடியாக ராஜினாமா செய்வது மக்களை முட்டாளாக்கும் செயல். இது குறித்து உடனடியாக சிபிஐ விசாரணை அமைக்க வேண்டும். படத்தில் நடிக்கும் போது விஜய் ஆனால் முதலமைச்சர் ஆன பின் ஜோசப் விஜய் என சொல்கிறார். அது மகிழ்ச்சி தான் என்றாலும் தமிழகமக்கள் எவ்வளவு முட்டாள்காக உள்ளனர் என்பதற்கு சான்று. திமுகவிற்கு இது ஒரு பாடமாக அமைந்துள்ளது. கூட்டணியில் இருந்த கட்சிகள் கொள்கையை நடுத்தெருவில் விட்டு அனாதையாக திமுகவை விட்டு தவெகவிற்கு சென்றது கண்டிக்கத்தக்கது.

விரைவில் மாற்றம் வரும் இது நிரந்தரம் கிடையாது. காங்கிரஸ் நின்ற இடத்தில் இருந்து அந்தர் பல்டி அடிப்பார்கள். இது தேசிய அரசியலில் பார்த்ததுதான். இனி வரும் தேர்தலில் இளைஞர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். பணத்திற்காகவோ, சினிமாவிற்காகவோ மாற்றி வாக்களிப்பது இந்தியாவை படுகுழியில் வீழ்த்தி விடும். படத்தில் வருவது போல ஆட்சி செய்ய முடியாது. என்ன தவறு என்றே தெரியாமல் அதிகாரிகளை நீக்கம் செய்வது சரியில்லை. சினிமா போல காட்சிகளை செய்யாமல் இருக்க வேண்டும் என்பது தான் எங்கள் கருத்து. விஜய் வந்ததில் எங்களுக்கு வருத்தம் இல்லை ஆனால் குதிரை பேரம் இல்லாமல் நேர்மையான ஆட்சி செய்ய வேண்டும் என்பதே எங்கள் நிலை. சரியான முறையில் ஆட்சி செய்தால் வரவேற்போம். தவறு செய்தால் விமர்சிப்போம் கண்டிப்போம். என தெரிவித்தார்...



# தஞ்சாவூர் பெரிய கோயில் மதில் சுவர் தூய்மை பணி பாதியில் நிறுத்தம்

தஞ்சாவூர் மே 29

தஞ்சாவூர் பெரிய கோவில் சிறிய கோட்டை மதில் சுவரில் வளர்ந் துள்ள செடிகள், மரங்கள் அகற்றும் தூய்மை பணியை தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் தொல்லியல் துறையில் உரிய அனுமதி கிடைக்காததால் பாதியிலேயே நிறுத்தப்பட்டது

இதனால் வரலாற்று ஆர்வலர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றான தஞ்சாவூர் பெரிய கோவிலை சுற்றியுள்ள அகழியில் பொதுமக்கள் நிதி உதவியுடன் மாவட்ட நிர்வாகம் தூய்மை பணி யை மே 16ஆம் தேதி தொடங்கியது. பெரிய கோவிலை சுற்றி அகழியில் தூய்மை பணி கிட்டத்தட்ட நிறைவ டைந்துள்ளது. இந்த நிலையில் கோவிலின் முன்பக்கம் உள்ள அகழியில் தற்காலிக மின் விளக்கு கள் பொருத்தப்பட்டுள்ளதால், இரவு நேரத்தில் மின்னொளியில் பொலி வை பெற்றுள்ளது .இதேபோல, சிறிய கோட்டை மதில் சுவர், கொத் தளத்தில் வளர்ந்துள்ள செடிகள், புதர்கள், மரங்களை அகற்று வதற் கான நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டது

இப்பணியில் முழு வீச்சில் நடைபெற்று வந்த நிலையில் இந்த தூய்மை பணியால் பிராதன சின் னங்களின் கட்டுமானம் பாதிக்க ப்படும் என தொல்லியல் துறை யினர் கூறியதால் பணி நிறுத்தப் பட்டதாக மாவட்ட நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து இந்திய தொல்லி யல் துறை அலுவலர்கள் கூறிய தாவது

கோட்டை சுவர்களில் உள்ள செடிகளை அகற்றுவதற்கானஒப்பந்தபுள்ளி ஏற்கனவே கோரப் பட்டு விட்டதாகவும், ஒரு மாத காலத் திற்குள் அப் பணி தொடங்கும் என வும் தெரிவித்தனர் கோயிலைச் சுற்றியுள்ள அகழியின் தெற்கு மற்றும் மேற்கு பக்க சுவர்களில் வளர்ந்துள்ள செடிகள் கட்டுமானங்களுக்கு சேதத்தை விளைவிக்கின்றன. எனவே இதை சீரமைத்து பாது காப்பதற்கான பணிகளை இந்திய தொல்லியல் துறை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என வரலா ற்று ஆர்வலர்கள் வலியுறுத் தி வருகின்றனர்

இதுகுறித்து அழகிய தஞ்சை இயக்கத்தின் திட்ட இயக்குனர் ரவிச்சந்திரன் தெரிவித்ததாவது

தஞ்சாவூர் பெரிய கோயிலு க்கு ஏராளமான சுற்றுலா பயணி கள் வரும் நிழையில், இந்த புராதன சின்னத்தை பாதுகாக்கும் வகை யில் சிறிய கோட்டை சுவர், கொத்த ளம் போன்றவற்றை விரைவாக சீரமைக்க வேண்டும். இதற்காக மத்திய அரசு மிகப் பெரிய திட்டத் தை வகுத்து தனியாக நிதி ஒதுக் கீடு செய்து, வல்லுனர்கள் கொண்ட தனிக்குழுவை அமைத்து மேற் கொள்ள வேண்டும் என்ற ரவிச் சந்திரன்.





## தினதமிழ் செய்தி எதிரொலி

# குடியிருப்பு பகுதியில் குவிந்து கிடந்த குப்பைகள் அகற்றம்

## பொதுமக்கள் நலன் கருதி (பொ) மேயர் மேரி பிரின்ஸி லதா நடவடிக்கை

நாகர்கோவில், மே. 29

தினதமிழ் செய்தி எதிரொலியாக குடியிருப்பு பகுதியில் குவிந்து கிடந்த குப்பைகள் அகற்றப்பட்டது. பொதுமக்கள்நலன்கருதி(பொ)மேயர் மேரி பிரின்ஸி லதா நடவடிக்கை!

நாகர்கோவில் மாநகராட்சி 6வது வார்டு பள்ளிவிளை, சானல்கரை சாலை என்பது கனியாகுளம் ஊராட்சி 7வது வார்டு பகுதியை இணைக்கும் சாலை ஆகும். இந்த சாலையில் நாகர்கோவில் டவுன் ரயில்வே நகர் உள்ளது. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த சாலை இரண்டு நிர்வாகத்திற்கும் இடைப்பட்ட பகுதி என்பதால் குப்பைகள் வாங்க தூய்மை பணியாளர்கள் வருவதில்லை. இதனால் கனியாகுளம் ஊராட்சி 7வது வார்டுபகுதிசாலையோரம்குப்பைகள் கொட்டப்பட்டு மாத கணக்கில் குப்பைகள் அள்ளாமல் குப்பைகள் குவிந்து துர்நாற்றம் வீசி சுகாதாரமற்ற நிலையில் காணப்பட்டது. குப்பையால் நாய் தொல்லை, கொசு தொல்லை, துர்நாற்றம் போன்ற காரணங்களால் பொதுமக்கள் அவதிப்பட்டு வந்த நிலையில் இது குறித்து தினதமிழில் செய்தி வெளியானது. செய்தியை அறிந்த நாகர்கோவில் (பொ) மேயர் மேரி பிரின்ஸி லதா அப்பகுதி மக்கள் நலன் கருதி இன்று சம்பவ இடத்திற்கு ஆய்வு மேற்கொண்டார். மேயர் வருகையை அறிந்த அப்பகுதி மக்கள் மேயரிடம் தங்கள் பிரச்சனையை எடுத்து கூறினார்கள். சுகாதாரமற்ற நிலையில் இருந்த அந்த பகுதியை பொது மக்கள் நலன் கருதி உடனே தூய்மை செய்ய நடவடிக்கை மேற்கொண்டார். இது அப்பகுதி மக்களிடம் நல்ல வரவேற்பு பெற்றது.

மாநகராட்சிமற்றும்ஊராட்சிஎல்கை பிரச்சனையால்சுகாதாரமற்றநிலையில் இருந்தஅந்தபகுதியைதூய்மைசெய்ய நடவடிக்கை மேற்கொண்டது மட்டுமின்றி இந்த பகுதியை தூய்மையாக வைக்க கனியாகுளம் ஊராட்சி நிர்வாகத்திற்கும் கோரிக்கை வைத்தார்.

பொதுமக்கள் சாலைகளில் குப்பைகளை வீசாமல் தூய்மை பணியாளர்களிடம் தரம் பிரித்து வழங்க மேயர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும் தூய்மையான மாநகரை உருவாக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## தருமபுரி மாவட்டக்குழு

# விவசாயிகள் கோடை உழவு செய்ய மானியம் ஏக்கருக்கு ரூ.5000 வழங்க கோரிக்கை!

தருமபுரி மே 29

தருமபுரி மாவட்ட த்தில் தென்மேற்கு பருவ மழை துவங்குவதற்கு முன்னே மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே மழை பொழிந்து வருகின்றது. இதனை பயன்படுத்தி கோடை உழவு நடந்து வருகிறது. ஆனால் முழுமையாக நடைபெறவில்லை அதனால் முழுமையாக நடைபெற விவசாயிகளுக்கு கடந்தாண்டு ஏக்கருக்கு ரூ. 800 கோடை உழவு மானியம் வழங்கப்பட்டது. இதில் ஒரு ஏக்கரை உழவு முடியாது ஒரு ஏக்கரை ஒரு இரண்டு சால் டிராக்டரில் உழவு செய்ய ரூ 2,600 ஆகும் பின் பதினைந்து தினங்களுக்குள் இன்னொரு முறை உழவு செய்தால் ரூ 2,600/ ஆகும் அதனால் தருமபுரி மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகள் கோடை உழவு செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ. 5000 ( ஐந்தாயிரம்) வழங்க மாவட்ட நிர்வாகம் புதிய தமிழ்நாடு அரசின் முதல்வர் C . ஜோசப் விஜயிக்கு பரிந்துரை செய்து பெற்றுதருமாறு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டக்குழு சார்பில் கேட்டுக்கொள்கிறது.

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தூக்கத்தை இழந்து தவிக்கிறார்!

## காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கணபதி சிவக்குமார் அறிக்கை



கோவை மே:29

தவெக கூட்டணி அமைச்சரவையில் காங்கிரஸ்,விடுதலை சிறுத்தைகள்,முஸ்லீம் லீக் பங்கேற்றது முதல் திமுகவினர் தூக்கத்தை இழந்து தவிக்கிறார்கள்!

வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற கதையாக ஆத்திரத்தின் உச்சத்தில் நின்று கொண்டு உளறிக் கொண்டிருக்கிறார்கள்.

திமுக கூட்டணியில் வெற்றி பெற்றதால் காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் சூடு, சொரணை இருந்தால் ராஜினாமா செய்ய வேண்டும் என்கிறார் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி. 1999 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இணைந்து திமுக போட்டியிட்டது.

அடுத்த ஆண்டே வாஜ்பாய் தலைமையிலான மத்திய பாஜக அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்தது இதே திமுகதான்.

தமாகா,இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் வாக்குகளைப் பெற்றுவிட்டுபாஜகவுக்கு எதிரானமக்கள்தீர்ப்பை எறிந்து விட்டு பாஜகவை ஆதரித்தீர்களே?

அப்போது சூடு,சொரணையை பாஜகவிடம் அடகு வைத்தீர்களா?

மாணிக்கம் தாகூரை ராஜினாமா செய்யச் சொல்ல திமுகவினருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது.

தேர்தல் பிரச்சாரத்தில் உங்களைக் கழுவிக் கழுவி ஊற்றிய எடப்பாடியை முதலமைச்சராக்க முயன்றீர்களே,அப்போதுஎங்கேபோனதுசூடு,சொரணை

நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில் திமுக சொற்ப வாக்குகள் வித்தியாசத்திலேயே பல தொகுதிகளில் வெற்றி பெற்றது.அந்த வெற்றிக்குக் காங்கிரஸ் தான் காரணம். சூடு சொரணை இருந்தால்,திமுக எம்எல்ஏக்கள் எல்லாம் ராஜினாமா செய்யத் தயாரா?

அதே சமயம்,கருணாநிதியின் உடலை அடக்கம் செய்ய அனுமதிக்காத,திமுகவைதீயசக்தி என்றுவசைபாடிய,உதயநிதியை பால்டாயில் என்று அசிங்கப்படுத்திய,ஸ்டாலினை பொம்மை முதல்வர் என்று விமர்சித்த எடப்பாடியை முதலமைச்சராக்கத் துடித்தீர்களே? அன்று தான் வெட்கம்,மானம்,சூடு,சொரணை எல்லாவற்றையும் நீங்கள் தொலைத்தீர்கள். திமுகவோடு எடப்பாடி பழனிசாமி கைகோர்க்கிறார்என்று தெரிந்து கொதித்து எழுந்து 3 அதிமுகவினரும் எம்எல்ஏ பதவியை தூக்கி எறிந்தனர். அந்த 3 அதிமுகவினரும் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி கூறுவது போல் உண்மையிலேயே சூடு,சொரணை உள்ளவர்கள்தான். அதிமுகவினரைப் போல் சூடு,சொரணை இருந்தால்,காங்கிரஸ்,விசிக,கம்யூனிஸ்ட்டுகள் ஆதரவுடன் வென்ற திமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்ய வேண்டும். இனி வரும் காலங்களில் காங்கிரஸ் பேரியக்கத்தை சிறுமைப்படுத்த முயன்றால்,பதிலடி பலமாக இருக்கும் என்பதை திமுகவினருக்கு எச்சரிக்கையாக தெரிவிக்கிறேன் என்று தெரிவித்தார்.

## சிங்கப்பூரில்

# வேலை வாங்கித் தருவதாக 2 பேரிடம் ரூ.13 லட்சம் மோசடி

## அருமனை போலீசார் வழக்கு பதிவு

நாகர்கோவில், மே. 29

அருமனை அடுத்த புலியூர்சாலை பகுதியை சேர்ந்தவர் அகிலேஷ் (28) பிஇ பட்டதாரி. அதே பகுதியை சேர்ந்த மற்றொரு பி இ பட்டதாரியான தினேஷ் என்பவரும் நண்பர்கள். இருவரும் வேலைக்கு வெளிநாடு செல்ல திட்டமிட்டு, அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் இருவரும் வெளிநாடு செல்வதற்காக சென்னையில் உள்ள ஒரு தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தை அணுகி உள்ளனர். அப்போது அங்குள்ள நிர்வாகிகள் இருவரையும் சிங்கப்பூருக்கு அனுப்பி வைப்பதாக ஆசை வார்த்தை கூறி, அதற்கு தலா ரூ. 6 லட்சத்து 50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ 13 லட்சம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளனர். இதனை நம்பிய அகிலஷ் மற்றும் தினேஷ் இருவரும் சில தவணைகளாக மொத்தம் 13லட்சம்ரூபாய்பணத்தைஅந்தடிராவல்ஸ்நிறுவனத்தில் ஒப்படைத்துள்ளனர். பணத்தை பெற்றுக்கொண்டு, டிராவல்ஸ் சார்பாக கூறியபடி சிங்கப்பூருக்கு வேலைக்கு அவர்களை அனுப்பி வைக்காமல் நாட்களை கடத்தி சென்றுள்ளனர். இதனால் சந்தேகமடைந்த அகிலேஷ் மற்றும் தினேஷ் ஆகியோர் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்ததை அடுத்து கொடுத்த 13 லட்சம் ரூபாயை திரும்ப தருமாறு அந்த நிறுவனத்தில் கேட்டுள்ளனர். ஆனால் அவர்கள் பணத்தை திருப்பி தராமல் ஏமாற்றியதாக கூறப்படுகிறது. இதை எடுத்து இருவரும் அருமனை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் போலீசார் உடனடியாக வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கண்டனர். முதற்கட்ட விசாரணை அடிப்படையில், பண மோசடியில் ஈடுபட்ட காஞ்சிபுரத்தை சேர்ந்த சடகோபன் சீனிவாசன் (60) மற்றும் சேலத்தை சேர்ந்த ரகுமான் கான் (45) ஆகிய இருவர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள இவர்களை பிடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.



## நாகர்கோவிலில்

# மாவட்ட திமுக அலுவலக கேட் உடைப்பு 5 பேர் கும்பல் மீது வழக்கு பதிவு

நாகர்கோவில்,மே. 29

நாகர்கோவில் ஒழுகின சேரியில் மாவட்ட திமுக அலுவலகம் உள்ளது. நேற்றுமுன்தினம்இரவுகோட்டாறிலிருந்து ஒழுகினசேரி நோக்கி ஒரு மினி டெம்போ சென்று கொண்டிருந்தது. இந்த டெம்போவில் தமிழக வெற்றி கழகத்தின் கொடி கட்டப்பட்டு இருந்தது. மாடசாமி என்பவர் வாகனத்தை ஓட்டி சென்றார். மினி டெம்போ திமுக மாவட்ட அலுவலகத்திற்கு அருகே வந்தபோது எதிர்பாராத விதமாக பழுதாகி நின்றது. அப்போது அங்கு நின்ற கும்பல் அந்த மினி டெம்போவைதள்ளிசென்றுசாலையோரம் நிறுத்தியது.

இதை தொடர்ந்து டெம்போவை தள்ளியதற்கு பணம் தருமாறு ஓட்டுனர் மாடசாமியிடம் அந்த கும்பல் கேட்டு மிரட்டி உள்ளார்கள். பணம் கொடுக்க மறுத்ததால் ஏற்பட்ட தகராறில் அந்த கும்பல்ஓட்டுநர்மாடசாமியைசரமாரியாக தாக்கியது. தாக்குதலில் நிலை குலைந்த மாடசாமியை அந்த கும்பல் திமுக மாவட்ட அலுவலக இரும்பு கேட் மீது தூக்கி வீசியது. இதில் கேட் பெயர்ந்து உடைந்தது.

அதன் பின்னரும் அந்த கும்பல் திமுக அலுவலகத்தைதாக்கினர்.இதற்கிடையில் திமுக அலுவலக கேட்டை உடைத்து விட்டதாக செய்திகள் பரவின. தகவல் அறிந்தவுடன் திமுக மாவட்ட செயலாளர் மகேஷ் உள்ளிட்ட ஏராளமாக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் சம்பவ இடம் விரைந்துசென்றனர்.வடசேரிபோலீசாரும் அங்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

தாக்கப்பட்ட ஓட்டுநர் மாடசாமி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது சம்மந்தமாக போலீசார் வழக்கு பதிவு செய்து சிசிடிவி கட்சிகளை ஆய்வு செய்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

மாவட்ட தலைநகரில் திமுக அலுவலகம் சேதப்படுத்தப்பட்ட சம்பவம் நாகர்கோவில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக அலுவலக பொறுப்பாளர் குமார், மினி டெம்போ டிரைவர் மாடசாமி ஆகியோர் மர்ம கும்பல் மீது நடவடிக்கை கோரி புகார் அளித்துள்ளனர். போலீசார் வழக்குபதிவு செய்து சம்பவம் தொடர்பாக ஒருவரை பிடித்து விசாரித்து வருவதாக தெரிய வருகிறது.

## உலகபட்டினி தினத்தை முன்னிட்டு

# தவெக சார்பில் நலதிட்ட உதவிகளுடன் அறுசுவை விருந்து

சென்னை, மே 29,

உலகப் பட்டினி தினத்தை முன்னிட்டும், தமிழக முதல்வராக ஜோசப் விஜய் பதவியேற்றதை கொண்டாடும் விதமாகவும் சென்னை தி.நகர் உஸ்மான் சாலையில் அமைந்துள் தியாகராயநகர் சட்டமன்ற அலுவலகத்தில் 1000 பேருக்கு அறுசுவை விருந்தும், 1000 பேருக்கு நலதிட்ட உதவிகளும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் வழங்கினார் . உடன் தவெக தெற்கு (வடக்கு) மாவட்டச் செயலாளர்கே.அப்புனு(எ)வேல்முருகன் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள், மகளிரணியினர் உடனிருந்தனர்.



## உலக பட்டினி தினம்

# நாகர்கோவில் மாநகர தவெக சார்பில் ஏழை, எளிய மக்களுக்கு உணவு

## மாவட்ட செயலாளர் மாதவன் வழங்கினார்



நாகர்கோவில், மே 29

நாகர்கோவிலில் உலக பட்டினி தினத்தையொட்டி கன்னியாகுமரி மாவட்டம் கிழக்கு மாவட்ட தமிழக வெற்றி கழகத்தினர் அண்ணா பேருந்து நிலையத்தில் ஆதரவற்ற மக்களுக்கு உணவு வழங்கினர்.

தமிழகம் முழுவதும் உலக பட்டினி தினம் கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி ஆதரவற்ற முதியவர்கள், கைவிடப்பட்டவர்கள் போன்ற அடித்தட்டு மக்களுக்கு தமிழக வெற்றி கழகத்தின் தலைவரும் முதல்வருமான ஜோசப் விஜய் அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும் என ஆணையிட்டு இருந்தார். முதல்வரின் உத்தரவை ஏற்று தமிழக வெற்றி கழகத்தினர் மாநிலம் முழுவதும் உணவு வழங்கினர். இதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தமிழக வெற்றி கழகத்தினர் நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி தொகுதிகளில் மாவட்ட செயலாளர் மாதவன் தலைமையில் கட்சி நிர்வாகிகள் சார்பில் உணவு வழங்கினர். நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையத்தில் மாநகர செயலாளர் சிவன் சார்பில் ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்வை மாவட்ட செயலாளர் மாதவன் தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட மற்றும் மாநகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து மாவட்ட செயலாளர் கூறுகையில்: உலக பட்டினி தினத்தையொட்டி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் கடந்த வருடங்களில் உணவு வழங்கி வந்தோம். தவெகதலைவரும்தமிழகமுதல்வருமான விஜய் ஆணைக்கிணங்க கழக பொதுச்செயலாளர் அமைச்சர் ஆனந்த் வழிகாட்டுதலின்படி கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் தொகுதிகளில் அனைத்து ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள ஆதரவற்ற ஏழை, எளிய மக்களுக்கு உணவு வழங்கினோம். காப்பகங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் உணவு வழங்கப்பட்டது. நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையத்தில் மாநகர செயலாளர் சிவன் தலைமையில் உணவு வழங்கினோம். மக்கள் இயக்கமாக இருந்து செய்து வந்த பணியை தற்போதும் செய்து வருகிறோம். தவெக ஆட்சியில் யாரும் உணவின்றி இருக்கக் கூடாது அனைத்து மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்கத்தோடு முதல்வர் விஜய் செயல்பட்டு வருகிறார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.